தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 10

2008 ஏப்ரல் 22, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்."

ஓர் அரசுக்கு வெற்றியைத் தருவது, பகைவரை வீழ்த்தும் வேலல்ல; குடிமக்களை வாழ வைக்கும் வளையாத செங்கோல்தான்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

குடிநீர்

***20753—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதி மக்களுக்கு மண்ணாடிமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குட்பட்ட 95 குடியிருப்புகளுக்கு மண்ணாடிமங்கலத்தைத் தலைமைப் பணியிடமாகக் கொண்ட செல்லம்பட்டி-வாடிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு, மண்ணாடிமங்கலத்திலிருந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 575 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 99 குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், இடையில் ஒப்பந்ததாரரால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, மறு டெண்டர் விடப்பட்டு, இப்போது பணி நடைபெற்று வருகின்றது. ஆனால், பணி மந்தமாக நடைபெற்று வருகிறது. இப்பணியைத் துரிதப்படுத்தி மக்கள் பயன்பாட்டுக்கு உடனடியாகக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்காட்டியதைப்போல, 2003 ஆம் ஆண்டு செல்லம்பட்டி-வாடிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரருக்குப் பணி உத்தரவு 14-10-2004 அன்று வழங்கப்பட்டு, 4-2-2005-ல்தான் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. 16-3-2006 வரை 85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மீதம் இருக்கக்கூடிய பணிகள் முடிவு பெறாத காரணத்தால், 20-12-2007-ல் பணி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, இப்போது மீண்டும் 2008-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, எஞ்சியிருக்கக்கூடிய பணிகளுக்குப் புதிய ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்பட்டுப் பணிகள் முடியும்தறுவாயில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. மகேந்திரன்.

2008 ஏப்ரல் 22]

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், செல்லம்பட்டிக்கு அணைப்பட்டியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், சுமார் 371 இலட்சம் ரூபாய் செலவில் 85 குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டது. இப்பணி மிகவும் மந்தமாக நடைபெறுகிறது. இப்பணி எப்போது முடிவடைந்து மக்கள் பயன்பாட்டுக்கு அளிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலமாக உசிலம்பட்டி தொகுதியில் இருக்கக்கூடிய செல்லம்பட்டி மற்றும் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 85 குடியிருப்புகளில் இருக்கக்கூடிய 33,025 மக்கள் பயன்படக்கூடிய வகையில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வைகை நதியை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரக்கூடிய இந்தத் திட்டத்தின் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, பணிகள் மந்தமாக நடைபெறவில்லை; வேக வேகமாக இந்த ஆட்சியில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல; சோதனை ஓட்டத்தில் உள்ள இந்தத் திட்டம், மே 2008-க்குள் முழுமையாக முடிக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இவ்வினா பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து, வினா எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.